# தமிழ் வளர்ச்சியில் சமயங்களின் பங்கு

**G. லக்ஷ்மி நாராயணன்**

**சைவாகமத் துறை, கற்பகம் பல்கலைகழகம், கோயம்புத்தூர்.**

31

**ஆய்வுச்சுருக்கம்**

கடவுள் ஒருவரென்றால் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமயங்களும் பிணங்கும் சமயக் கொள்கைகளும் அவற்றைக் கூறும் சமயத் தத்துவநூல்களும் குருமார்களும் இருப்பதேன்? சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் இக்கருத்தை ஆராய்ந்து வருகின்றன; மாறுபட்ட சமயக் கொள்கைகளுக்கிடையில் அடிப்படை ஒற்றுமையை காணும் முயற்சியையும் மேற்கொள்கின்றன. உலகில் வழங்கும் சமயநெறிகளுக்கெல்லாம் தாயாகவும் புகலிடமாகவுமிருக்கும் இறைவன் ஒருவனே; அம்முதல்வன் அறிவினால் மிக்க சமயநெறிகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக மெய்ம்மை ஒழுக்கங்களை வகுத்தருளி உலகங்களையெல்லாம் தத்தம் சமய ஒழுங்கு நெறியில் பிறழாதவாறு நிலைபெறச் செய்கின்றான். சிவநெறியின் இக்கருத்து,

**"ஆயாதன சமயம்பல அறியாதவன் நெறியின்,**

**தாயானவன் உயிர்கட்குமுன் தலையானவன்"**

எனவரும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் வாக்கால் நன்கு விளங்கும்.

**திறவுச் சொற்கள்**

செயுள்; யான், எனது எனும் செருக்கே தற்போதம்; சமயங்களுக்குள் பொதுக் கருத்து.

**முன்னுரை**

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவர்கள் நம் முன்னோர்கள். எம்மை பொறுத்த வரையில் தமிழ் என்பது நமது மொழி மட்டும் அல்ல அது உணர்வுகளை தாண்டியது.

இத்தகைய மூத்த மொழியினைச் சிறப்பிக்கும் வகையில் ஒப்பற்ற பேரிலக்கியங்கள், அதனோடிணைந்த சிறந்த பண்பாடு, கலாச்சாரம் என்பன தமிழ் மொழியின் பெருமையினை உலகமெங்கும் எடுத்து சென்று வருகின்றது.

**மனித வாழ்க்கை**

மனிதன் விலங்குமல்லன்; கடவுளுமல்லன்; விலங்குத் தன்மையிலிருந்து விலகி மனிதத் தன்மையையடைந்து கடவுள் தன்மையை அடைய முயலும் ஒரு தோற்றமாவான். அவன், மனித வடிவத்தில் பிறக்கின்றான். ஆனால், அவன் முயன்றே மனிதத் தன்மையில் லயம் அடைந்து, அவ்வழி இறைமைநிலை எய்துகின்றான். இயல்பாக மனித வாழ்க்கை குறையுடையது. குறையினின்றும் நீக்கி நிறை பெறவே வாழ்க்கை. குறை நீக்கத்திற்கும் நிறைநலம் பெறுவதற்கும் சமயம் இன்றியமையாதது. சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறை. அதாவது, மனிதனை நெறிப்படுத்தி அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் சாதனம்.

**தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்**

இத்தாலிமொழியைத் தாந்தே என்னும் கவிஞரும், ஆங்கில மொழியைச் சாஸர் என்னும் அறிஞரும், ஜெர்மன் மொழியை லூதர் என்பவரும், டச்சுமொழியைக் கிறிஸ்தியெர்ன் பெடெர்சன் என்னும் பெரியாரும் உண்டாக்கி வளர்த்தனர் என்று பழங்கால ஐரோப்பியர் நம்பி வந்தனர்.[1] இங்ஙனமே வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தியருக்கும் சிவபெருமான் கற்பித்தார் என்று பழங்காலத் தமிழர் நம்பினர். ஆயின், மொழி மக்களது உள்ளுணர்விலிருந்து தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுவரும் ஒரு கலை என்பது இன்றைய மொழிவல்லுநர் துணிவாகும்.

**மொழியின் தோற்றம்**

மலை நாட்டு மக்களாகிய கொண்டர், சவரர், துதவர் முதலியவர் உணர்ச்சிவயத்தால் ஆடுவர்; ஆடிக்கொண்டே பாடுவர். இவ்வாறே பழங்கால மக்களும் ஆடிய நேரங்களிலெல்லாம் வாய்க்கு வந்தவாறு பாடிவந்தனர். அவர்தம் பாடல்கள் முதற்கண் பொருளில்லா வெற்றொலிகளாக இருந்தன; நாளடைவில் படிப்படியாகப் பொருள்களை உணர்த்தத் தொடங்கின. ஒவ்வோர் ஒலியும் தான் தோன்றிய இடமும் காலமும் காரணமும் பற்றி ஒரு பொருளையோ தொழிலையோ உணர்த்தத் தொடங்கியது. இங்ஙனம் முதலில் பொருளில்லா வெற்றுரைகளாக இருந்த ஒலிகள் காலப்போக்கில் கருத்தை உணர்த்தும் சொற்களாயின என்பது அறிஞர் கருத்து.

முதலில் மனிதன் பாடுதற்கு மட்டும் அறிந்திருந்தான்; பின்புதான் பேசத்தொடங்கினான். அதனால் தான் ஒவ்வொரு நாட்டு இலக்கியத்திலும் பாட்டு முற்பட்டதாகக் காணப்படுகிறது, உரைநடை பிற்பட்டதாக அமைந்துள்ளது. என்று அறிஞர் கூறுகின்றனர்.[2]

**தமிழ் மொழிக்கு "தமிழ்" என்ற வார்த்தை எப்படி உருவானது?**

**“தமிழன் என்றொரு இனம் உண்டு,**
**தனியே அவர்க்கொரு குணம் உண்டு.**
**அமிழ்தம் அவனது மொழியாகும்,**
**அன்பே அவனது வழியாகும்.” - நாமக்கல் கவிஞர்.**

**“அமிழ்து அமிழ்து அமிழ்து என்று உரைக்கின் அது தமிழ் தமிழ் என்றாகும்”** என்கிறார் கவிஞர்.

தூய தமிழ் பேசுபவர்கள் அமிழ்துண்ட வானோர்களைப்போல நீண்ட ஆயுள் பெற்று வாழ்வர், ஏனென்றால் தமிழ் மொழியின் கட்டமைப்பு அப்படி, நாம் ஒரு நாளில் விடும் மூச்சின் அளவு நிமிடத்திற்கு சராசரியாக 15 மூச்சுகள் என்றால் மணிக்கு 900 மூச்சுகள், ஒரு நாளுக்கு என்று பார்த்தால் 900 X 24 = 21,600. **அதில் கடைசி இரு இலக்கங்களை நீக்கிப்பார்த்தால் வருவது உயிர் மெய்யெழுத்துக்களின் கூட்டு, அதாவது 216.**

**தமிழின் தனித்துவம்**

இந்த உலகத்தில் உள்ள செம்மொழி அந்தஸ்து உடைய மொழிகளில் தமிழ் மொழி முதன்மையானது.

இதன் சிறப்புக்கு பங்காற்றும் வகையில் நமது முன்னோர்கள் இயல், இசை, நாடகம் எனும் வகையில் தமிழை இலக்கியங்களாகவும் கலை வடிவங்களாகவும் படைத்து தாமும் மகிழ்ந்து தமது சுற்றத்தையும் உலகத்தாரையும் உவகை கொள்ள செய்தனர்.

இதனால்தான் தமிழ் ஏழ்கடல் தாண்டியும் தன் மணம் மாறாது ஒலித்து கொண்டிருக்கின்றது. உலகத்தில் தமிழர்கள் மாத்திரமே தமது மொழியை தமது பெரும் அடையாளமாக கருதி வாழ்ந்து வருபவர்களாக திகழ்கின்றனர்.

**பிற மொழிக் கலப்பு**

தமிழ்மொழி மிகப்பழைய காலத்தில் தமிழகத்தில் தனிநிலை பெற்று வளர்ந்துவந்தது. தமிழர் இந்தியாவில் இருந்த பல மொழி மக்களோடு காலப்போக்கில் வாணிகம், சமயம், அரசியல் இவற்றில் கலந்து உறவாடத் தொடங்கியமையால், வடமொழி, பிராக்ருதம் முதலிய மொழிச் சொற்கள் தமிழிற் கலந்தன. தொல்காப்பியர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் தமிழின் பழைய நிலையையும் தொன்னூலுடைமையையும் ஆராய்ந்து இயற்சொல், திரிசொல் இவையென்று சிறப்பித்துக் காட்டிப் பிறசொற்கள் தமிழின்கட் புகுதலை உடன்பட்டு, வடசொல், திசைச்சொற்கள் புகுதற்கும் விதி வகுத்தனர். இதனால் தமிழ் மொழிக்குக் கலப்பற்றுத் தனிநின்ற இயற்சொல் நிலை முன்பே உண்டென்பதும், பிற திசைகளில் வழங்கிய பழஞ்சொற்களையும் தன்னிடங்கொண்ட தென்பதும்,

**"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**

**றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"**

**- என்னும் தொல்காப்பியச் சூத்திரம் கொண்டு துணியலாம்.**

**சமயத்தின் தேவையும் பயனும்**

குறையுடைய மனிதனை நிறையுடையவனாக்க ஓரளவு கல்வி துணைசெய்யும். ஆனால், முழுமையாகத் துணை செய்யக் கல்வியால் இயலாது.

**"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்டினும் என் இதயமும்**

**ஓடுங்கவில்லை!" - என்பார் தாயுமானார்.**

**"கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்- என்பார் மாணிக்கவாசகர்.**

இதனால் கல்வி தீது என்றும் கற்றலில் பயனில்லை என்றும் பொருள் கொள்ளற்க.

**"கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்"- என்றார் திருஞானசம்பந்தர்.**

கல்வியின் பயன் அறிவு; அறிவின் ஆக்கம் அருள். கல்வியின் பயனாகிய அறிவை நாடாமல், அருளைப் பெறாமல் "கற்றுள்ளோம்'" என்று சொல்லல் கூடாது. கற்ற நூற் கருத்தினை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுது அறிவு தோன்றுகிறது. அந்த அறிவு குறை நீக்கத்திற்குத் துணை செய்யும். ஆனால் அதுவும் முழுமையாகத் துணை செய்ய இயலாது. ஒரு குறை நிறையைத் தர இயலாது. நிறைநலம் சான்று ஒன்று தான் குறை நீக்கத்திற்குத் துணை செய்ய முடியும்; நிறை நலத்தைத் தரமுடியும். குறைவிலா நிறைவாகக் கோதிலா அமுதாக இருந்தருளம் இறைவன்தான் உயிர்களின் குறை நீக்கத்திற்கும் நிறைநலப் பேற்றுக்கும் துணை செய்ய முடியும் குறைநீங்காத

வரையில் துன்பம் நீங்காது; துன்பம் சேராது; உயிரின் குறை நீக்கத்திற்கு நிறைநலப் பேற்றுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது சமயம், சமயம் மனிதரை நெறிப்படுத்துவது, முறைப்படுத்துவது. சமயம் ஒரு தூய்மையான வாழ்க்கை முறை; சமய வாழ்க்கையில் புலன்களும், பொறிகளும் செம்மையடையும்; இதயம் விரியும்; ஈர அன்பு பெருகி வளரும்; வேறுபாடுகள் மறையும்; ஒருமை தோன்றும்; ஓருலகம் மலரும்; இதுவே சமயத்தின் பயன்.

**வேறுபடு சமயங்கள்**

**"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்**

**விளங்குபரம் பொருளே! நின் விளையாட் டல்லான்,**

**மாறுபடுங் கருத்தில்லை; முடிவின் மோன**

**வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா!" - தாயுமானார்.**

**குறிப்பு :** "மோன வாரிதி" (அமைதிக்கடல்)

இங்ஙனம் உயர்ந்த வாழ்க்கை முறையைக் காட்டும் சமயங்கள் தம்முள் மாறுபடுவது ஏன் மாறுபாடு மட்டுமன்றி முரண்பாடுகளும் ஏன்? எல்லை கடந்த நிலையில் சமயப் பூக்கள் வளர்ந்து, மனித உலகத்திற்குத் தீமை செய்வானேன்? நியாயமான கேள்விகள்! சமயப் பூசல்கள் சமயத்திற்காக நிகழ்ந்தன அல்ல; நிகழ்வன அல்ல, உலகவியல் நலன்களைக் காத்துக் கொள்ள விரும்பும் ஆடையில்லாச் சுயநலப் பிறவிகள், மனித உருவில் நடமாடிய காட்டு விலங்குகள், சமயத்தின் பெயரால் பூசல்களை வளர்த்தன; வளர்த்துக் கொண்டிருக்கின்றன. இச்சமயப் பூசல்கள் நிகழ்த்துவோருக்கும் உண்மையான சமய நெறிக்கும் உண்மையில் தொடர்பே இல்லை. சமய வேறுபாடுகள் இயல்பானவை, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலங்களில், வாழ்ந்த மானிட சாதியின் அனுபவத்தில், ஞானிகளின் உணர்வில் சமய நெறிகள் முகிழ்ந்தன. நிலத்தின் காரணமாகவும், காலத்தின் காரணமாகவும், உற்ற அனுபவங்களின் வாயிலாகவும் அவை தம்முள் மாறுபடுகின்றன. ஏன் பல சமய நெறிகள் அடிப்படைக் கொள்கையில் முரண்படுவதில்லை? நடைமுறைகளில்தான் மாறுபாடு. இஃது இன்றைய உலகத்தின் பெரும்பான்மையான சமயங்களுக்குப் பொருந்தும். உண்மையான உள்ளுணர்வுடன் நோக்கினால் வேறுபாடு தெரியாது; இல்லை, வேற்றுமையிலும் ஒற்றுமைக் காண்பதுதான் சிறந்த பண்பு.

**தமிழர் சமயம்**

தமிழினம் காலத்தால் முந்தித்தோன்றிய மூத்த இனம்; இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பேசும்மொழிக்கு இலக்கணம் கண்ட இனம்: உலகில் எல்லா மொழிகளுக்கும் இலக்கணம் உண்டு. ஆனால் தமிழினம், மக்களின் வாழ்க்கை நெறிக்கும் இலக்கணம் கண்டது. தமிழினத்தின் சிந்தனை உயர்வுக்கு, பண்பாட்டு ஆர்வத்திற்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகள். தமிழினத்தின் வாழ்வியற் செப்பம் காலங்கடந்தது. வரலாற்றாசிரியர்களின் வரையறைகளைக் கடந்தது. இப்படித்தான் வாழ வேண்டுமென்ற வாழ்க்கை நியதியைத் தமிழினம் ஆட்சிகளின் மூலம் பெறவில்லை; அச்சுறுத்தல் மூலம் பெறவில்லை. அந்தப் பண்பாடு இயல்பான படிமுறை

வளர்ச்சியாகும். பழந்தமிழ் இலக்கணங்களும் சங்க இலக்கியங்களும் வாழ்க்கையில் தோன்றியவை; வாழ்க்கை அனுபவத்தில் முகிழ்த்தவை. அவை சுற்றிச்சுற்றி வந்து வாழ்க்கையையே நெறிமுறைப்படுத்துகின்றன. நெறிநின்றோர் புகழப்படுகின்றனர். வாழ்வியலின் வாய்மைகள் இலக்கியச் சுவையுடன் எடுத்துக்காட்டப் பெறுகின்றன. ஆயினும், வாழ்வியலை விஞ்சிய சுவையில்லை. தமிழினம் சமயநெறியை இயல்பாகவே மேற்கொண்டனர். அது யாரிடமிருந்தும் கற்றுக் கொண்டதில்லை. ஏன்? ஐம்பூதங்களை வணங்கியவார்களை அவைகளுக்கு அப்பாலும் இறைவனுண்டு என்று நெறிப்படுத்தியவார்களே தமிழர்கள்தாம். சங்க காலத்தில் தமிழினத்தின் வாழ்வில் சமயம் ஒரு பகுதியாக இருந்ததில்லை; சமயம் வாழ்க்கை முழுவதும் படர்ந்து கால் கொண்டிருந்தது. அதனால், பக்தி இயக்கங்கள் இல்லை; பக்தியில் தோன்றிய இலக்கியங்கள் மிகுதியாக இல்லை. சிலர் சங்ககாலத்தில் சமயம் முதன்மைப்படுத்தப்பட்டதாக இல்லை என்பர்; அது தவறு. பக்தி இலக்கியக் காலத்தைவிடச் சங்க இலக்கியக் காலத்தில்தான் உண்மையான சமயமிருந்தது என்று சொல்ல வேண்டும்.

**“தீதும் நன்றும் பிறர்தர வாரா; ஆருயிர் முறைவழிப் படூ உம் என்பது திறவோர், இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆ அய் அல்லன்”** என்ற சொழ்றொடர்கள் சங்க காலத்துச் சமய உணர்வை வெளிப்படுத்துவன. தமிழர் சமயம் வாழ்க்கையில் முகிழ்த்தது. ஆதலால் அதில் கற்பனை இல்லை அதிசயங்கள் இல்லை; அற்புதங்கள் இல்லை. நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உரியதாக அமைந்து இருக்கும் பெருமை நமது சமயத்திற்கு உண்டு.

**தமிழர் சமயத்தைச் சிறப்பித்தோர்**

தமிழகத்தில் நிலவும் அறுவகைச் சமயங்களின் வளர்ச்சியிலும் தமிழர்க்குப் பங்குண்டு. தமிழர்கள் முறையே சிவபெருமானை, திருமாலை, முருகனை வழிபடும் பேற்றினைப் பெற்றவர்கள். ஆயினும், தத்துவ அடிப்படையில் அவர்கள் சமயம் “சித்தாந்தம்” என்று அழைக்கப்பெறும்.

டாக்டர் ஜி.யூ. போப், **“தமிழரின் அறிவில் முகிழ்த்த ஒப்பற்ற சமயநெறி சித்தாந்தம்”** என்று பாராட்டுவார்.

தமிழர் சமயம், அறிவார்ந்த உண்மைகளுக்கு மாறுபட்டதன்று. ஆனாலும் அறிவு எல்லையில் மட்டும் நின்று ஆராயத்தக்கதுமன்று. ஆழ்ந்த உண்மைகள் அனுபவத்திற்கேயுரியன. சித்தாந்தச் சமயம் ஞான நெறியாகும். பழமை-புதுமைப் பிணக்கு பழங்காலத்தில் துமிழகத்தில் இருந்ததில்லை. வாழ்க்கை வேறு, சமயம் வேறு என்ற வேறுபட்ட நிலையும் இருந்ததில்லை, கலை, வாழ்க்கை இவ்விரண்டுக்குமிடையே இன்றுள்ள முரண்பாடுகளும் அன்று இருந்ததில்லை. முரண்பாடுகள் அனுபவமின்மையின் விளைவுகளே; பழங்காலத் தமிழர் வாழ்வியல் அறிவாராய்ந்து அனுபவத்தின் வழிப்பட்டதாயிருந்ததால் அன்று முரண்பாடுகளிருந்ததில்லை.

**சமணம் வளர்த்த தமிழ்**

சமணர்கள் புது வகையான இலக்கியங்களையும் அறநூல்களையும் இயற்றினர். சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் ஐம்பெரும் காப்பியங்களில் இடம்பெறும் நூல்கள் இவ்விரு

நூல்களும் இளங்கோ அடிகளால் இயற்றப்பட்டன. காவியப் பண்புகளெல்லாம் ஒருங்கே பெற்ற சீவகசிந்தாமணி ஐம்பெரும் காப்பியங்களின் வா◌ிசையில் சிறப்பிடம் பெறுகின்றது. பிற சமயத்தாரும் இந்நூல்களை பொ◌ிதும் பாராட்டுகின்றனர். சைவராக கருதப்பெறும் நச்சினார்க்கினியர் உரை எழுதி உள்ளார். சமயம் கடந்த காவிய நயம் பெற்ற நூல் என்பதற்கு இதுவே சான்று. சூளாமணி, வளையாபதி, யசோதர காவியம், நீலகேசி, உதயணன் கதை, மேரு மந்திரப் புராணம், திருக்கலம்பகம், திருநூற்று அந்தாதி ஆகியனவும் சமணர்கள் இயற்றிய நூல்கள் ஆகும்.

சொற்களின் பொருள்களை அறிய துணைபு◌ாியும் நிகண்டுகளை முதன்முதலில் இயற்றிய பெருமை சமணர்களையே சாரும். **சூடாமணி நிகண்டை இயற்றிய மண்டல புருடர் சமண முனிவரே.**

சீவக சிந்தாமணி, வளையாபதி ஆகிய மூன்று இலக்கியங்களும் சைனர்களால் எழுதப்பட்டவை. சிலப்பதிகாரம் காலத்தில் தமிழகத்தில் ஆசீவகம், சைனம், பௌத்தம், சைவம் ஆகிய மூன்று மதங்களும் செழிப்புடன் இருந்தன என்று சிலப்பதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. திருவள்ளுவர் சைனர் என்று தமிழ் அறிஞர்கள் திரு.வி.க., வையாபுரி பிள்ளை, உ.வே.சா. ஆகியோர் அழுத்தமாகக் கூறுகின்றனர். மதுரையில் கி.பி.604 ஆம் ஆண்டில் சங்கா என்று அழைக்கப்பட்ட சைன கூடுகை நிரந்தரமாக இருந்து வந்தது. இதுதான் மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச்சங்கத்துக்கு அடித்தளமாக இருந்திருக்க வேண்டுமென்று ஜார்ஜ் எல். ஹார்ட் கூறுகிறார். [சான்று தேவை]

**நவீனத்துவமும் தமிழ்மொழியும்**

ஆங்கில மொழியின் ஆதிக்கம் உலகமெங்கும் பரந்து விட்ட நிலையில் தமது தாய்மொழியை ஒதுக்கும் மனநிலைக்கு இன்றைய காலத்து குழந்தைகள் மாறியிருப்பது வேதனைக்குரியதாகும். இன்றைய கல்வி முறை, வேலைவாய்ப்பு என்பன ஆங்கிலம் மூலமாக தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் தமிழ் எதற்கும் பின் நிற்கவில்லை இணையங்களிலும் கணினிகளிலும் சமூக வலைத்தளங்களிலும் தமிழ் தனக்கென ஒரு தனியிடத்தை பெற்று வலம் வருகின்றது. கவிதைகளும், கட்டுரைகளும் இன்று இணையத்தில் வலம் வருகின்றன.

**சமயங்களுக்குள் பொதுக் கருத்து**

சமயநூல்கள் பலவும் ஒன்றோடொன்று ஒவ்வாத பொருள் கூறினாலும் தமிழ்ச் சான்றோர் அம்மாறுபட்ட கருத்துக்களிடையே ஒரு அடிப்படை ஒற்றுமையை, ஒத்த கருத்தினைக் கண்டனர். அந்த ஒத்த கருத்துத் **"தற்போத நீக்கம்"** என்பது.

**'யான், எனது'** எனும் செருக்கே தற்போதம். **'யான், எனது'** என்னும் தன்னலமே தற்போதம். உண்மைச் சமயமார்க்கம் தற்போத நீக்கத்தை வலியுறுத்தும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

**"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்**
**குயர்ந்த வுலகம் புகும்."**

**முடிவுரை**

**"எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே"** என்ற பாரதியின் தமிழ்

மொழி வாழ்த்தை போல எமது மொழி நிலைத்து பெருமை கொள்ள வேண்டுமானால் அது நம்மை போன்ற இளைஞர்கள் கைகளினால் தான் முடியும்.

எமது மொழியை பாதுகாக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு என்பதனை நாம் அனைவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

**மேற்கோள்கள்,**

1. Otto Jespersen, Mankind Nation and Individual, p. 51.

2. Otto Jespersen, Language, etc., pp. 436-437.

**துணைநின்ற நூற்கள்**

1. நமது நிலையில் சமயம் சமுதாயம்.